புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்.101-1/போ.துறை/2016 தேதி :14-11-2016

## செய்திக் குறிப்பு

சபரிமலை சீசன் நவம்பர் மாதம் மத்தியில் தொடங்கி ஜனவரி மூன்றாவது வாரம் முடிவடைகிறது. இந்த காலங்களில், பெரும்பாலான பக்தர்கள், பயணியர் ஒப்பந்த வாகனங்கள் (வேன்கள்) மற்றும் சரக்கு வாகனங்களில் (லாரிகளில்) பயணம் செய்கின்றனர். இவ்வாகனங்களில், பயணிகளுடன் கேஸ் சிலிண்டர்கள், அரிசி மூட்டைகள், சமையல் சாதனங்களையும் எடுத்துச்செல்வதால், வாகன விதிமுறைகளை மீறி அதிக சுமைகளோடு வாகனங்களை இயக்கி வருகிறார்கள் என்ற தகவலும் தெரியவந்துள்ளது. இவை அனைத்தும் எதிர்பாராத வகையில் விபத்துகளையும், உயிர் சேதத்தையும் விளைவிக்கக்கூடும். மேலே கூறப்பட்ட அனைத்துச் செயல்களும், மோட்டார் வாகனச் சட்டப்படி விதிமீறலாகும்.

ஆகவே, அனைத்து பயணியர் ஒப்பந்த வாகனங்கள் மற்றும் சரக்கு வாகனங்களின் உரிமையாளர்கள் இந்த செய்திக்குறிப்பின் மூலம் அறிவுறுத்தப்படுவது யாதெனில், தங்களின் வாகன ஓட்டுநர்களுக்கு தக்க ஓய்வு கொடுத்தும், வாகனங்களில் அதிக சுமைகளை ஏற்றாமலும், பயணிகளைத் தவிர இதர பொருட்களான சமையல் கேஸ் சிலீண்டர்களையோ, அரிசி மூட்டைகளையோ, சமையல் சாதனங்களையோ ஏற்றிச் செல்ல வேண்டாம் என்றும் விதிகளை மீறும் வாகனங்கள் மீது மோட்டார் வாகனச் சட்ட விதிகளின் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுச்சேரி போக்குவரத்துத் துறை தெரிவித்துக்கொள்கிறது.

GOVT. OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்